05.06.2025 CC 33/2021 PW1. சுரேஷ்குமார்

கடந்த 05.05.2024ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.02/2025 dated 16.05.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், வழக்கறிஞராக இருந்து வருகிறேன். பணம் கொடுக்கல் வாங்கல் இருந்த காலக்கட்டங்களில் நான் வழக்கறிஞராக இருந்தேன் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால், டைல்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறார். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால், 10 வருடங்களாக தெரியும்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த ஆண்டில் டைல்ஸ் கடையை ஆரம்பித்தார் என்றால், சுமார் 10 வருடங்கள் இருக்கும். சாட்சி தானாக முன்வந்து டைல்ஸ் கடையில் பொருட்கள் வாங்குவதற்காக பணம் தேவைப்படுகிறது என்று தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பணம் வாங்கினார் என்கிறார். மேற்படி விவரங்களை நான் எனது வழக்காவணங்களில் சொல்லவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தற்பொழுதும் கடை உள்ளதா என்றால், அது எனக்கு சரியாக தெரியாது.

3. மூன்று லட்சம் ரூபாய் கடன் கொடுக்கும் அளவுக்கு எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் என்ன உறவு முறை என்றால், அவர் எனக்கு நண்பர் என்ற முறையில் கொடுத்தேன். மேற்படி விவரங்களை நான் எனது வழக்காவணங்களில் கூறவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், எந்தக் காலக்கட்டங்களிலும் பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால், சரியல்ல.

4. 10 வருட காலங்களில் எனக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால், இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் குடும்ப உறுப்பினர்கள் பெயர் மற்றும் அவர்கள் என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. குற்றம்

சுமத்தப்பட்ட நபருக்கு எத்தனை பிள்ளைகள் என்ற விவரமும் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் கடனாக கொடுத்த தொகையை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால், இல்லை. நான் ரொக்கமாக கையில் வைத்திருந்தேன்.

5. மூன்று லட்சம் ரூபாய் ரொக்கமாக எனது கையில் இருந்ததற்கான காரணம் என்ன என்றால், எனது மாமா ஹரிதாஸ் மொபைல் கடை வைத்திருந்தார். அதில் நானும் முதலீடு செய்துள்ளேன். அதிலிருந்து வந்த பணம் ஆகும். எனது மாமாவை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யலாம் என்றால், சரிதான். மேற்படி மொபைல் கடைக்கு தனியாக வங்கிக் கணக்கு உள்ளதா என்றால், அது ஒரு சிறிய கடை என்பதால் அதற்கு தனி வங்கிக் கணக்கு இல்லை. மேற்படி மொபைல் கடை எங்கு உள்ளது என்றால், திங்கள்நகரில் அரசு அனுமதியுடன் உள்ளது. தற்சமயம் 4 வருடங்களுக்கு முன்பு அந்த கடை மூடப்பட்டது.

6. மேற்படி மொபைல் கடையின் அரசு அனுமதி சான்றிதழ் யார் பெயரில் இருந்தது என்றால், எனது மாமா பெயரில் தான் இருக்கும். மேற்படி விவரங்கள் நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அது போல் யாரும் இல்லை என்றாலும், சரியல்ல. அந்த மொபைல் கடை ஒரு சிறிய கடை என்பதால் அதில் இருந்து பெரும்தொகைகள் வருவதற்கு வாய்ப்பு இல்லை என்றால், நான் கடைக்கு அட்வான்ஸ் தொகை கொடுத்திருந்தேன். அது எனக்கு வந்தது. அதிலிருந்த தொகையை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுத்தேன்.

7. நான் வழக்கறிஞர் என்பதால் மொபைல் கடை வைத்து தொழில் செய்ய முடியாது என்றால், அது எனது மாமா வைத்திருந்த கடையாகும். அதில் நான் முதலீடு செய்திருந்தேன். நான் வழக்கறிஞராக இருப்பதால் வருமானம் ஈட்டக்கூடிய வேறு எந்த தொழிலும் செய்ய அனுமதி இல்லை என்றாலும், அப்படி செய்தால் அது சட்டவிரோதம் என்றாலும், சரியல்ல.

8. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்த காலக்கட்டங்களில் ஒரு மாதத்திற்கு முன்போ அல்லது பின்போ அவர் கடைக்கு சென்றிருந்தேனா என்றால், சரிதான். எத்தனை முறை குற்றம் சுமத்தப்பட்ட நபர் கடைக்கு சென்றிருப்பேன் என்றால், பலமுறை சென்றிருக்கிறேன். நான் கடைக்கு செல்லும் போது எல்லாம் வியாபாரம் நடந்து கொண்டிருந்ததா என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின்

கடையில் எத்தனை நபர்கள் வேலை செய்து வந்தார்கள் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தவிர 2 நபர்கள் வேலை செய்து வந்தார்கள்.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் பணம் கொடுத்த காலக்கட்டமானது கொரோனா ஊரடங்கால் பொதுமுடக்கம் உள்ள காலக்கட்டம் என்பதால் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், கடை திறந்திருக்கவும் வாய்ப்பில்லை என்றாலும், ஆனால் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

10. 25.03.2020 தேதியிலிருந்து கொரோனா ஊரடங்கு உத்தரவால் பொதுமுடக்கங்கள் செய்யப்பட்டிருந்தது இந்நிலையில் 15.06.2020 அன்று பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது பொய் என்றால், சரியல்ல. எனது வீட்டிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டிற்கும் இடையே 2 கி.மீ. தூரம் என்பதால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வந்து பணம் வாங்கி சென்றார். நான் வேறுநபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை.

11. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் கடன் கொடுப்பதற்கு 2020–ம் காலக்கட்டங்களில் எனது வங்கிக்கணக்கில் பணம் இருந்ததா என்றால், நான் மொபைல் கடை அட்வான்ஸ் தொகையை பெற்று கொடுத்தேன். அதனால் அதனை வங்கிக் கணக்கில் செலுத்தவில்லை. அந்த கடையின் உரிமையாளர் யார் என்றால், செட்டியார் மடத்தை சேர்ந்த முருகன். மேற்படி முருகனின் கடையை நாங்கள் மோபைல் கடை நடத்தி வந்ததற்காக வாடகை பத்திரம் உள்ளதா என்றால், உள்ளது. ஆனால் அது 4 வருடங்களுக்கு முன்பு உள்ளதால் அதை எங்கு வைத்துள்ளேன் என்பது எனக்கு தெரியாது. அது அதன்பிறகு தேவையில்லாத ஆவணம் என்பதால் அதனை எனது மாமா கிழித்து போட்டிருக்கலாம்.

12. நாங்கள் மேற்படி கடையை வாடகைக்கு தான் இருந்தோம் என்றால், சரிதான். அந்த வாடகை மாதம் 4 ஆயிரம் ஆகும். 4 ஆயிரம் ரூபாய் வாடகை என்பதால் அதற்கு 3 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் தொகை பெறமாட்டார்கள் என்றால், சரியல்ல. மேற்படி விவரங்களை நிரூபணம் செய்வதற்கு கடையின் உரிமையாளர் முருகனை இவ்வழக்கில் விசாரணை செய்யலாம் என்றால், சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது நண்பர் என்றும் 10 வருடங்கள் பழக்கம் என்றும் கூறவில்லை என்றால், சரிதான்.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீட்டில் உள்ள கடனை தீர்ப்பதற்காக என்னிடம் பணம் வாங்கினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் கடன் வாங்கிய தேதியன்றே கடனுக்கு உறுதிக்காக இவ்வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால், சரிதான். கடன் வாங்கிய உறுதிக்காக கொடுத்த காசோலையை வைத்து காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால், சரியல்ல.

14. கடன் கொடுத்த பணத்தை திரும்பக் கேட்டு நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் பணம் கொடுத்த பிறகு எத்தனை முறை நான் பணம் அவரிடம் திருப்பிக் கேட்டுள்ளேன் என்றால், 2 முறை கேட்டிருக்கிறேன். அந்த 2 முறையும் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிம் எங்கு வைத்து பணத்தை திருப்பிக் கேட்டேன் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் கடையின் வெளியே இருக்கும் போது கேட்டேன்.

15. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு உண்மையில் பணம் கொடுத்திருந்தால் நான் அவரை முறையாக அணுகி பணம் கேட்டிருப்பேன் என்றாலும், நான் வெளியே பணம் கேட்டிருப்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலக்கட்டங்களிலும் பணம் திருப்பிக் கேட்டதாக சொல்லப்படும் காலக்கட்டங்களிலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொரோனா ஊரடங்கால் கடையை மூடிவிட்டார் என்றாலும் எனவே நான் கேட்டிருக்க வாய்ப்பில்லை என்றால், சரியல்ல.

16. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எந்த தேதியிலும் என்னிடம் வந்து அவரது வங்கிக் கணக்கில் பணம் உள்ளது என்றும் அவரது காசோலையை பயன்படுத்தி எடுத்துக் கொள்ளுமாறு சொல்லவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் காசோலை கொடுக்கும் போதே அவரது வங்கியில் பணம் உள்ளதாகவும், அதனை எடுத்துக் கொள்ளுமாறும் கூறினாரா என்றால், கூறினார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் அவரது வங்கிக்கணக்கில் பணம் இருந்தால் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியமும் இல்லை என்றாலும், காசோலை தரவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், சரியல்ல.

17. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும்

இல்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தொழில் நிமித்தமாக வேறு நபர்களுக்கு கொடுத்த காசோலையை நான் வாங்கி இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. காசோலை யாரால் நிரப்பப்பட்டது என்றால், அது எனக்குத் தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் தரும்போதே அதனை பூர்த்தி செய்திருந்தார் என்றால், சரிதான். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிம் பணமோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.